நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



நண்ணும் புகழ்ப் பெருமை நகரத்தார் குரலுக்குக்
கண்ணளித்துக் காப்பாற்றும் கண்ணுடையாள் காப்பாமே

ஜூன் 1982

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

குரல் 1
ஒலி 5

துந்துபி
வைகாசி

ஜூன்
1982

காட்டுவழி போனாலும் கள்ளர்பய மானாலும்
கேட்டுவழி காலகனூர் கிட்டினும் — நாட்டமுடன்
நம்பிக்கை யாக நமக்கு விளையகனின்
தும்பிக்கை உண்டே துணை.

— பாடுவார் முத்தப்ப செட்டியார்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001.

தொலைபேசி ; p. p. 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

பாடத் தமிழ் தருவாய்

சொ. சொ. மீ. சுந்தரம் எம். காம்.

நாட்டர சன்கோட்டை - தமிழ்
நாடு பெருங்கோட்டை
பாட்டர சன்கோட்டை - கம்பன்
பார்த்த புகழ்க்கோட்டை
போட்ட தமிழ்க்கோட்டை - மீருப்
புலவர் திருக்கோட்டை
பாட்டில் உயிர்த்தெழுந்த - தமிழ்ப்
பத்தினி யாள்கோட்டை.

கண்ணகி யாகவரும் - அருட்
கண்ணுடை நாயகியே!
மண்ணில் உனதடியே - மனதில்
வாழ்த்தி வணங்குகிறோம்.
விண்ணுக் கரியவளே - எங்கள்
வீட்டை விளக்கிடுவாய்
பண்ணில் இருப்பவளே - உனையே
பாடத் தமிழ்தருவாய்.

நம் தாய்மொழி தமிழ். அதனால் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்கிறோம். அது மந்திர மொழி என்பதற்காக அல்ல. தமிழ் நாட்டில் தமிழுக்குச் சட்டம் போடத் தேவையில்லை. இயல்பாகவே தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும்.

— டாக்டர் வ. சுப. மாணிக்கம்

(தமிழ் அர்ச்சனை மாநாட்டில்)

நகரத்தார் குரல்

நம்மவர்க்கும் உதவுங்கள்

கோடை விடுமுறைக்குப் பின் கல்லூரிகள், பள்ளிகள் திறக்கப்பட இருக்கின்றன. எதைப் படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படி முன்னேறலாம் என மாணவ, மாணவிகள் பரபரத்துக் கொண்டிருக்கிறார்கள். நம் பிள்ளைகளையும் பெண்களையும் எப்படிச் சேர்க்கப் போகிறோமோ, அவர்கள் வாழ்வு வளம் பெறவேண்டுமே எனப் பெற்றோர்கள் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வேளையில் நகரத்தார் சமூகத்துப் பிள்ளைகளின் மீது 'முற்பட்ட வகுப்பு' என்று குத்தப்பட்டுள்ள முத்திரை, அவர்களின் முன்னேற்றத்திற்கு ஒரு தடை என்று நாம் சொல்லி, யாரும் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. அரசின் மனம் இரங்கும் வரை நம் சமூகத்துப் பெரியவர்களால் தோற்றுவிக்கப்பட்டு அவர்களது பொறுப்பிலுள்ள கல்லூரிகளில், பள்ளிகளில் நம் பிள்ளைகளுக்கு முற்பட்ட வகுப்பினரில் முதலிடம் கொடுத்துதவ வேண்டுமென இரு கரம் கூப்பிக் கேட்டுக்கொள்கிறோம். நாம் நம்மினத்தவருக்கு உதவ முன்வராவிட்டால், வேறு யார் உதவ முன்வருவார்கள் ?

நம் பிள்ளைகளும், பெண்களும் பழைய காலத்தை நினைத்துக் கொண்டு அலட்சியமாக இருந்து விடாமல் பொறுப்போடு கல்வியைக் கற்றுத் தேறி, உழைப்பை உயிர்மூச்செனக் கொண்டு, வாழ்வில் வளம் கண்டு பிறந்த வீட்டிற்கும் தாய் நாட்டிற்கும் பெருமை தேடித் தருவார்களாக !

போன் : 25635

யுனைடெட் பேப்பர் கம்பெனி

22, பந்தடி 4வது தெரு

மதுரை-625001.

எல்லாவித பேப்பர், போர்டுகள்,
திருமண அழைப்பிதழ், கவர்கள்
மொத்தமாகவே சப்ளை செய்கிறோம்.
தேவைக்கு அணுகுங்கள்.

மீனாட்சி பட்டினத்தில் மேலாக தொடர்ந்து வரும்
தேனமுத **நகரத்தார்** திருமிகுந்த குரல் ஒலிக்க
அருணாசலம், கண்ணன், அரு. ராஜா இமானுவேலும்
பெருமையாக வாழ்த்துகின்றார் பேரெழிலாய் வணங்குகின்றார்.

Best compliments from

Grams : JAYAPHARMA
Phone : 31127

JAYA MEDICAL CORPORATION

21, WEST CHITRAI STREET

MADURAI-1.

STOCKISTS FOR

Roche (Voltas Ltd.)
M.S.D. Products ,,
Boots Co. (India) Ltd.
John Wyeth Laboratories Ltd.
Geoffery Manners & Co. Ltd.
Boehringer Knoll Ltd.
TCF Products (Rallis India) Ltd.
Schering U.S.A. (Fulford (India) Pvt. Ltd.)
East India Pharmaceutical Works Ltd.
Sandoz (India) Ltd.
Raptakos, Brett & Co.
Smith, Stanistreet & Co Ltd.
Duphar Interfran Ltd.
Chowgule & Co. (Hind) P. Ltd.
Parry & Co. Ltd.—Sea Gold Shark Liver Oil
Muller & Phipps Ltd.
Indo-French Laboratories P. Ltd
Ultra Lab
Sandersan Pharmaceuticals

நகரத்தார்கள் என்றால் இலங்கையில் தனி மரியாதை

மாணிக்கம் செட்டியார் பேட்டி

இலங்கையில் வசிக்கக் குடியுரிமை பெற்று, இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் மாறி மாறி இருந்து வரும் கண்டரமாணிக்கத்தைச் சேர்ந்த மு. சி நா. மாணிக்கம் அவர்களை அண்மையில் தற்செயலாகச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது 'இலங்கையில் வசிக்கும் இவர்களைப் பேட்டி கண்டால் நமக்கு நிறையத் தகவல்கள் கிடைக்குமே' என்ற எண்ணம் ஏற்பட்டு அவர்களை அணுகியபோது, அவர்கள் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் பேட்டியளித்தார்கள்.

மாணிக்கம் அவர்கள் மிகவும் இளைஞர். அதுவும் 22 வயதுடையவர். துடிப்பும் ஆர்வமுமிக்கவர். வயதுக்கு மீறிய மதிநுட்பத்துடன் தயக்கமே இல்லாமல் தன்னடக்கத்துடன் மள மள வென்று அவர் பேட்டிக்குப் பதிலளித்த பாணி என்னை மிகவும் கவர்ந்தது.

''இலங்கையைப் பற்றியும் அங்குள்ள தமிழர்கள், நகரத்தார்கள் பற்றியும் முதலில் சொல்லலாமா?'' என்று கேட்டபோது —

''இலங்கையின் மக்கள் தொகை 1·25 கோடி. இதில் தற்போது இந்தியர்கள் 4 ஆயிரம் பேரும் இந்திய வம்சாவழியினர் ஒரு இலட்சம் பேரும் உள்ளனர். மீதி, பிற இனத்தவர் உள்ளனர். நகரத்தார்களில் குடியுரிமை பெற்றவர்கள் 30 பேர் உள்ளனர்.

இலங்கையில் 'Temporary Residence Permit' முறையில் எஸ்டேட் உரிமையாளர்கள்சுமார் 32 பேரும் நேரு - கொத்தலாவே ஒப்பந்த முறையில் சில பேரும் சிரிமா - சாஸ்திரி ஒப்பந்த முறையில் சில பேரும் இருக்கிறார்கள்'' என்று அவர் தெரிவித்தார்.

இந்தியர்களின் சொத்துக்கள்

'' இலங்கையில் இருந்த இந்தியர்களின் சொத்துக்களை இலங்கை அரசு எடுத்துக்கொண்டு விட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது பற்றி...''



'' இந்தியர்களில், 'இலங்கைப் பிரஜை' என்று குடியுரிமைபெற்றவர்கள்தான் அங்கு இருக்க முடியும். குடியுரிமை பெற்றவருக்கு 21வயது நிறைவெய்தி விட்டால் அரசு மீண்டும் குடியுரிமையை *'Re Confirm'* செய்து கொள்கிறது. இலங்கையில் தென்னை, தேயிலை, ரப்பர், கொக்கோ, ஏலக்காய்த் தோட்டங்க

தான் அதிகம். இந்தியர்களுக்குச் சொந்தமாக இலட்சக் கணக்கான ஏக்கரா பரப்பளவில் இருந்த அவற்றை உரிமையாளர்களில் ஒரு நபருக்கு 50 ஏக்கர்கள் வீதம் ஒதுக்கிவிட்டு மீதமுள்ள அனைத்தையும் அரசு எடுத்துக்கொண்டு நிலமில்லாதவர்களுக்கு பட்டாப் போட்டுக் கொடுத்துவிட்டது. பல தோட்டங்களை அரசே வைத்துக்கொண்டு நிர்வகித்து வருகிறது. 1971ல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்தது. இதனுல் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நகரத்தார்களும் வெளிநாட்டு நிறுவனங்களும் தாம். எடுத்துக் கொண்ட ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களுக்கு அரசு இன்னமும் நஷ்ட ஈடு வழங்க வில்லை.


''இலங்கையில் குடியுரிமை பெருதவர்கள் வட்டித் தொழில் செய்யக்கூடாது என்று 1963ல் அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தது. அதிலிருந்து குடியுரிமை பெருதவர்கள் அங்கு எந்தத் தொழிலும் செய்ய முடியாமல் வெளியேறினர். இதனுல் நகரத்தார்களின் எண்ணிக்கை அங்கு குறைந்தது''

மரியாதை

''நகரத்தார்களுக்கு அங்கு கொடுக்கப்படும் மரியாதைபற்றிக் கொஞ்சம் கூறலாமா?''

''இலங்கை நீதி மன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் சாட்சி சொல்ல நகரத்தார்கள் வருவார்களேயானுல் பெரும்பாலும் அவர்கள் பக்கம் வழக்கு அனுகூலமாகவே முடியும். நகரத்தார்கள் சாட்சி கூறினுல் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிருர்கள்.

''இங்கு சட்டம் நீதியை நம்மவர்கள் நிலைநாட்டியுள்ள காரணத்தால் 'நகரத்தார்கள்' என்ருல் இங்கு தனி மரியாதை கிடைக்கிறது. Justice of Piece — அதாவது 'சமாதான நீதவான்' என்ற ஒரு கௌரவப் பதவியை அலவாக் கோட்டையைச்சேர்ந்த அரு. சித. சுப்பிரமணியன் செட்டியார் அவர்



இலங்கையில் காலி நகரத்திற்கும் மாத்திரைக்கும் இடையில் உள்ள புத்தர் சிலை இது. இதன் உயரம் 125 அடி. இந்தப் புத்தர் சிலையை மையமாகக் கொண்டு மிகப் பிரமாண்டமான அளவில் கோயில் ஒன்று எழுப்பப்படுகிறது.

களுக்கு இலங்கை அரசு வழங்கியிருக்கிறது. இங்கு பல ஆண்டுகளுக்கு முன்னால் அரிசி இறக்குமதி வணிகமே நகரத்தார்களின் கையில்தான் இருந்தது''

கோவில்கள்


''இலங்கையில் உள்ள கோவில்கள் பற்றிச் சொல்லலாமா?

''ஓ தாராளமாக. இலங்கையில் சுமாராக 60 கோயில்கள் உள்ளன. அவற்றில் கொழும்பு நகரில் உள்ள பழைய கதிரேசன் கோயில் புதிய கதிரேசன் கோயில், காலியில், கதிர் காமத்தில் உள்ள முருகன் கோயில்கள், நீர் கொழும்பு புத்தலத்தில் உள்ள முத்துமாரியம்மன் கோயில்கள் மாதம்பையில் உள்ள செல்வ விநாயகர் கோயில் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இப்போது 7 அல்லது 8 கோயில்களைத் தான் நகரத்தார்கள் நிர்வகித்து வருகிறார்கள்.

''வலையபட்டி ராம. சுப. சேதுராமன்செட்டியார் அவர்கள் கொழும்பு கொம்பேனித் தெருவில் உள்ள சிவசுப்பிரமணிய சுவாமி திருக் கோயிலுக்குள் விநாயகர் கோவில் ஒன்றைச் சொந்தமாக எழுப்பி நிர்வகித்து வருகிறார்கள்.

''பொதுவாக நகரத்தார்கள் சம்பந்தப்படாத கோவில்களே இல்லை. பழைய, புதிய கதிரேசன் கோவில்களில் ஆண்டுக்கு ஒரு முறை மாறி மாறி நடைபெறும் ஆடிவேல் விழா கண் கொள்ளாக் காட்சியாகும்.''

திரு. மாணிக்கம் அவர்களின் தந்தையார் காலஞ்சென்ற மு. சின்ன நாச்சியப்ப செட்டியார் அவர்கள் 1945 முதல் 1975வரை



1976ல் நடைபெற்ற இலங்கை புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலின் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தின் போது இலங்கையில் வாழும் வெளியூர் நகரத்தார்கள் பட்டுச் சாத்த வந்த போது எடுத்த படம்.

பல ஆண்டுகள், இலங்கையில் உள்ள புத்தளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலின் தர்மகர்த்தாவாக இருந்து இறைத்தொண்டு புரிந்திருக்கிறார்கள். 1975 க்குப் பிறகு அவர்களது புதல்வரும் திரு. மாணிக்கம் அவர்களின் மூத்த சகோதரருமாகிய சி நா. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தர்மகர்த்தாவாக இருந்து தந்தையின் வழியைப் பின்பற்றி வருகிறார்கள். இவர்கள் ஆயிரக் கணக்கில் செலவு செய்து 1976 செப்டம்பரில் இத்திருக் கோவிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தைச்செய்து வைத்து புண்ணியம் தேடிக் கொண்டார்கள்.

அகில உலக இந்து மாநாடு

''அண்மையில் அங்கு அகில உலக இந்து' மாநாடு நடைபெற்றதே, அதைப் பற்றிக் கூறலாமா?''

''இலங்கை அரசு ஏற்பாடுசெய்த அகில உலக இந்து மாநாடு 5 நாட்கள் சிறப்பாக நடந்தேறியது. இலங்கையின் அதிஉத்தம ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் தலைமையேற்றார்கள். சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்ற இதற்கு இலங்கை அரசு பெரும் பொருளுதவி செய்திருக்கிறது. இந்த மாநாட்டில் அரபு, இந்தோனேஷியா, கனடா, நேப்பாளம், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற பல நாடுகள் பங்கெடுத்துக் கொண்டன. மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒரே நேரத்தில் கொழும்பு நகரில் உள்ள பண்டார நாயகா நினைவுமண்டபம், விவேகானந்தா மண்டபம், புதுக்கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றன. மாநாட்டில் பல நாடுகள் இந்து சமயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து அறிக்கை சமர்ப்பித்தன.

''இந்தியாவிலிருந்து திருமுருக கிருபானந்த வாரியார், தருமை ஆதீனகர்த்தா, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் தமிழண்ணல், மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் சிவானந்த யோகி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. சை.வே. சிட்டிபாபு, பொள்ளாச்சி திரு. N. மகாலிங்கம் போன்ற பலர் கலந்து கொண்டனர். இந்தமாநாட்டில் இந்துசமய ஒற்றுமையை வலியுறுத்தி எல்லோரும் பேசினார்கள். டி. வி., வானொலி, பத்திரிகைகள் மாநாட்டுக்கு முக்கியத்துவம் தந்தன. குறிப்பாக நகரத்தார்களுக்கு VIP முக்கியத்துவம் அளித்தார்கள். புத்தகக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இலங்கையின் இந்துஅற நிலையத்துறை அமைச்சர் திரு. செ. ராஜதுரை அவர்கள் மாநாடு சிறப்புற நடைபெற முழு முயற்சி எடுத்துக் கொண்டார்.''

திரு. மாணிக்கம் அவர்கள் இலங்கையைப் பற்றிக் கூறும் போது இலங்கையில் தமிழ் இரண்டாவது தேசீய மொழியாக இருப்பதாகவும் அங்கு தமிழ் முழங்காத இடம் இல்லையென்றும் அஞ்சல் அலுவலகங்களில் தமிழில் தந்தி கொடுக்க வசதியுள்ளதென்றும் குறிப்பிட்டார். மாதும்பையில் உள்ள செட்டியார் தெருவில் ஏற்கனவே 100 நகரத்தார் குடும்பங்கள் இருந்தன வென்றும் இப்போது தன் குடும்பம் மட்டும்தான் இருப்பதாகவும் கூறினார்.

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் மாணிக்கக் கற்கள் தோண்டி எடுப்பது அதிகமாக நடைபெறுவதாகவும் கண்டியில் 60 ஏக்கர் பரப்பளவில் உள்ள பேராதனை கார்டனில், உலகத்தில் வேறெங்கும் இருந்து 'இந்த கார்டனில் இந்த மரம் அல்லது இந்தச் செடி இல்லை' என்று குறிப்பிட்டுச் சொன்னால் அரசு அவர்களுக்குப் பரிசு வழங்குவதாயும் கூறினார்.

பல வேலைகளுக்கிடையே திரு. மாணிக்கம் அவர்கள் நம் ''நகரத்தார் குரல்'' பத்திரிகைக்கு பேட்டி அளித்ததற்கு நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேட்டி: எல். சுந்தரம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

உறுப்பினர் கட்டணம்

தனி இதழ்	விலை ரூ	1-00
ஆண்டுக் கட்டணம் (12 இதழ்கள்)	ரூ.	12-00

வெளிநாடுகளிலிருந்து இதழ்களைப் பெற விரும்புகிறவர்களுக்குக் கட்டண விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

உறுப்பினர் கட்டணம் செலுத்தியுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிரந்தர ரசீதின் எண்ணே உறுப்பினர் எண் ஆகும். முகவரிகளில் ஏதேனும் மாற்றம் செய்ய விரும்புபவர்கள் தங்களுடைய உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

விளம்பரக் கட்டணம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ.	500-00
அட்டை (உள் பக்கம்)	ரூ.	300-00
முழுப் பக்கம் (இரண்டு வண்ணம்)	ரூ	300-00
முழுப் பக்கம்	ரூ.	150-00
அரைப் பக்கம்	ரூ.	75-00

விவரங்களுக்கு:

25, வடக்குச் சித்திரை வீதி,

மதுரை-625 001.

தொலைபேசி : p p. 26668



திருமணச் செய்திகள் :
ஓர் அறிவிப்பு

நகரத்தார்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நிகழ்ச்சிகள், மணி விழா நிகழ்ச்சிகள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின் செய்திகளை எமக்கு எழுதி அனுப்பினால் வெளியிடுகிறோம். புகைப்படத்துடன் வெளியிட விரும்புபவர்கள் புகைப்படத்துடன் ரூ. 25/- கட்டணம் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

— நிர்வாகி

கும்பாபிஷேகம்

இராமநாதபுரம் மாவட்டம் மதகுபட்டிக்கும் சொக்கநாதபுரத்திற்கும் இடையில் உள்ள சிலந்தகுடி கிராமத்தில் கோவில் கொண்டுள்ள அருள்மிகு அழகு நாச்சியாகிய ஸ்ரீ பொன்னழகு அம்மனின் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் 27-5-82 அன்று வெகு சிறப்பாக நடந்தேறியது. மகாலெட்சுமி நூற்பாலை அதிபர் லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்களின் அரிய முயற்சியாலும் சிலந்தகுடி கிராம மக்களின் முழு ஒத்துழைப்பாலும் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. இதையொட்டி பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்களும் புலவர் நீ. சீ. சுந்தரராமன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

கவிஞர் கண்ணதாசன் இல்லாமல் சினிமா உலகம் அனாதையாக இருக்கிறது. இப்போது இருக்கிற யாருக்கும் கவிதை எழுத வரவில்லை. கவிஞரைச் சீக்கிரத்தில் தன்னிடம் அழைத்துக்கொண்ட கடவுளை நான் சபிக்கிறேன்.

— நடிகை மனோரமா

(கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில்)

அறிமுகமும் பாராட்டும்

ஒக்கூர் இராமநாதன் செட்டியார்

இப்போது 'சேர்மன்' பதவியில் இல்லாவிட்டாலும் 'சேர்மன் ராவன்னுமானு' என்று அன்போடு அழைக்கப்படும் ஒக்கூர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள் பல தொழில் நிறுவனங்களோடு, பல முக்கிய மனிதர்களோடு தொடர்புடையவர்கள். 'நல்லவர்' என்று எல்லோராலும் பாராட்டப்படுபவர்கள்.



தந்தையார்

இவர்களது தந்தையார் சோம சுந்தரம் செட்டியார் அவர்கள் டாக்டர் ராஜா சர் எம்.ஏ.முத்தையா செட்டியார் அவர்கள் குடும்பத்திலும் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் குடும்பத்திலும் நெருக்கமாகப் பழகியவர்கள்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்

ராம. அவர்கள் தனது சொந்த ஊரான ஒக்கூரில் தொடர்ந்து 8 ஆண்டுகள் ஊராட்சித் தலைவராகவும் அதே 8 ஆண்டுகள் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் இருந்து பல சிறப்பான சேவைகளைச் செய்திருக்கிறார்கள். இவர்களது நிர்வாகத்தில் இருந்த 42 ஊராட்சிகளும் இவர்களது காலத்தில் சாலை வசதி, தண்ணீர் வசதி போன்ற பல அடிப்படைத் தேவைகளைப் பெற்றன. ஒக்கூரிலும் சமுதாயக் கிணறு, மேல்நிலைத் தொட்டி, சாலை வசதி போன்ற பல நல்ல காரியங்களை இவர்கள் செய்து தந்திருக்கிறார்கள். இவர்கள் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவராக இருந்தபோது கட்சிச் சார்பற்றுச் சேவை புரிந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல்

இவர்கள் 1976-77ல் சிவகங்கைத் தொகுதியில் சட்ட மன்றத் தேர்தலில் ஜனதாக் கட்சி சார்பில் போட்டியிட்டார்கள். ஆனால் வாக்குகள் பிரிந்ததால் வெற்றி வாய்ப்பு நழுவிப் போய்விட்டது.

பதவிகள்

இவர்கள் நூல் வியாபாரிகள் சங்கத் தலைவராகவும், மதுரை நகர அரிமா சங்கத்தின் தலைவராகவும் இருந்து சேவை புரிந்திருக்கிறார்கள். இப்போது காசி நகரச் சத்திரத்தின் தலைவராகவும் மதுரை தமிழ் இசைச் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவராகவும் இருந்து சேவை செய்து வருகிறார்கள்.

நல்ல காரியங்கள்

இவர்கள் ஒக்கூரில் உள்ள சோமசுந்தரம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் நிறுவனத் தலை

ஃ பிறர் உனக்குச் செய்த தீங்கை உடனே மறந்துவிடு. அவர்கள் செய்த நலனை யாண்டும் நினைவில் வைத்துக்கொள்.

வராக இருந்து வருகிறார்கள். ஒக்கூரில் பயணிகள் தங்குவதற்கு ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். மருத்துவ மனைக்குக் கட்டிடம் கட்டி நன்கொடையாகத் தந்திருக்கிறார்கள். இதுபோல் இராமேஸ்வரத்தில் தங்கும் விடுதி கட்டி தேவஸ்தானத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். இவர்கள் திருக்கோஷ்டியூரில் ஏகாதசி, துவாதசியன்று அன்னதானம் வழங்கி வருகிறார்கள்.

நெசவாலைத்திட்டம்

ஒக்கூரில் 20 இலட்சம் ரூபாய் செலவில் நெசவு ஆலை ஒன்று ஏற்படுத்தத் திட்டமிட்டு இவர்கள் ஆவன செய்து கொண்டிருப்பது அந்த ஊர் மக்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

வருகிற செப்டம்பரில் மணி விழாக் காண இருக்கும் அவர்கள் தம் துணைவியாரோடு பல்லாண்டுகள் சிறப்போடு வாழ்ந்து நமக்கும் நாட்டுக்கும் நல்லன செய்ய உளமார வாழ்த்துவோம்.

– எல். சுந்தரம்

தேவை

தமிழ் நாடெங்கும் நகரங்கள் வாரியாக "நகரத்தார் குரல்" பத்திரிகைக்கு உறுப்பினர்களைச் சேர்க்கவும் விளம்பரங்கள் சேகரிக்கவும் ஆர்வமும், நாணயமும், நம்பிக்கையும் உள்ள இளைஞர்கள் தேவை. பகுதி நேர வேலையான இதற்கு, தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். நகரத்தார் இளைஞர்களுக்கு முன்னுரிமை உண்டு. ஆர்வத்தோடு பணியாற்ற விரும்புபவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் :-

மேலாளர்,
'நகரத்தார் குரல்'
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.

∴ கடவுளை மறப்பதற்கு நிகரான வறுமை பக்தனுக்கு இல்லை.

∴ அபகரிப்பதில் இன்பமில்லை; எடுத்து வழங்குவதில் இன்பமிருக்கிறது.

நம்பிக்கை

இராம. விசுவநாதன்

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற சொற்றொடர் பொருள் பொதிந்தது. விதியால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. தன்னம்பிக்கையால் நன்மையும் பெருகும்; தீமையும் நிகழலாம். ஆகவே, வாழ்க்கையில் கேடும் பெருக்கமும் உண்டு.

''கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்து
கோடாமை சான்றோர்க்கு அணி''

என்று வள்ளுவம் கூறுகிறது.

எனவே வாழ்க்கையில் இன்பமே எந்நாளும் என்பதில்லை; அவ்வாறே துன்பமே தொடரும் என்பதுமில்லை. இரண்டையும் தாங்கி, இவ்வுலக வாழ்வை நடாத்துதலே உயிர்களின் தலையாய பண்பும் கடமையும் ஆகும். இதற்கு அடித்தளம் உள் மனத்தின் ஆற்றலே. நெஞ்சு உரம் இருந்தால் நேர்மைத் திறன் வளரும். நெஞ்சு உரம் உடையாரே எச்சூழலிலும் நம்பிக்கை இழக்காமல் வாழ்வை வெறுத்தொதுக்காது வாழ்வின் இயல்பு தெரிந்து வாழவல்லார். இந்த நம்பிக்கை உணர்வினை வளர்த்துக் கொள்ள பல வழிகள் உள. இங்கே ஒன்றினை மட்டும் காணலாம்.

முருகக் கடவுள் வழிபாட்டு மூலம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் மக்கள் பலர். அந்நம்பிக்கை அவர்கள் வாழ்க்கைக்கு உரம். இதனால் வாழ்வு செம்மையுறுகின்றது. எடுத்த செயல் யாவினும் வெற்றி கிட்டுகின்றது. அதாவது நம்பிக்கை உணர்வு அறிவினைத் தூண்டி, மனத் திண்மையுடன், தளர்வறியாது, செயல்புரியத் தூண்டுகிறது. செயலாற்றல் பெருகும்போது, இடையூறு ஏற்படலாம். தடைக் கற்கள் வரலாம்; ஆனால் தடந்தோள்களுக்கு எதிரே அவையெல்லாம் தூள்; தூள். இந்தத் தத்துவத்தை உள்ளடக்கியதுதான் ''வேலுண்டு வினையில்லை; மயிலுண்டு பயமில்லை''.

தமிழறிந்த எல்லோரும் தளர்வறியா மனம் பெறவே தமிழ் முருகன் தமிழகம் எங்கணும் உறைந்து தமிழர்கள் குடியேறிய வெளி நாடுகளிலும் துணை நின்று, நம்பிக்கை உணர்வினை வளர்த்து நம் எல்லோரையும் வாழ வைக்கின்றான்.

சலுகைகளைக் கேட்டுப் பெற வேண்டும்; உரிமைகளை உதைத்துப் பெறலாம் என்று செயல்படுபவர்கள் நாங்கள்.

— டாக்டர் கே. காளிமுத்து
(தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர்)
(தமிழ் அர்ச்சனை மாநாட்டில்)

முருகனும், அழகும், தமிழும் ஆகிய யாவும் ஒன்றே. இவை வாழ்க்கைக்கு இன்பம் பயப்பன; நம்பிக்கை ஊட்டுவன; துன்பத்தை தூள் தூள் ஆக்குபவை. இவ்வருள்மிகு அழகுத் தமிழ் முருகனே வணங்கும் மரபு நம் தமிழ் கூறும் நல்லுலகில் குறிப்பாக நம் செட்டி நாட்டுப் பகுதியில் இயல்பாக அமைந்து காணப் பெறுகின்றது. வீட்டிலுள்ள ஐயா, ஆயாள், அப்பத்தாள் போன்ருேர் முருகன் படங் களைக் காட்டி குழந்தைகளுக்கு ஒரு வயது ஆகு முன்பே ''முருகா' சொல்லு; சாமி கும்பிடு'' என்று சொல்லி, சின்னக்குழந்தை சேவடி போற்றும்படி செய்துவிடுகின்றனர். ''முருகா'' என்று சொல்லத் தெரியாது; ஆனல் முருகன் படத்தைக் கண்ட குழந்தை, தன் பிஞ்சுக் கரங்கள் தமைக் கூப்பி, முறுவல் தவழக் கும்பிடும் காட்சி குழந்தைகள் உணர்வில் பக்தி நிறைந்ததையே காட்டும். வாழ்க்கைக்கு உணர்வு தான் முக்கியம் என்பது இதனல் பெறப்படும். நமது டாக்டர் தமிழண் ணல் கூட ஒரு தாலாட்டில் ''வெல்லம் இனிக்கும் என்றும் வேம்பு கசக்கும் என்றும் சொல்லிப் பழகவில்லை; ஆனல் சுவைத்துப் பழகி விட்டாய்''என்பார்கள். தாயின் மடியிலேயே, இந்துமதத் தத்துவங்கள் உணர்த்தப் பெறுகின்றன. அதன் விளைவே நமது மகாகவி, கவியரசர் கண்ணதாசன் பல வழிகளில் அறிவினைச் செலுத்தி, இறுதியில் தாய் சொன்ன தத்துவங்களான இந்து மதத்தை உணர்ந்து, இறைவன் புகழ் பாடத் தொடங்கினர். ''அர்த்தமுள்ள இந்து மதங்கள்''எழுதிக் குவித் தார். இக்கட்டான சூழல்கள் பல வந்தபோதும், பகைவர்களையும் நண்பர்களாக்கி, அரசவைக் கவிஞராகவும் திகழ்ந்தார். சிவனை நம்பினோர் சீவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

இத்தகு நம்பிக்கை உணர்வினை வளர்த்துக் கொள்ள பலபாடல்கள் காலையில் படிப்பதுண்டு. அதில் ஒன்று இதோ :-

''முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! — ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்''

இதன் பொருளை நான் உணர்ந்தவாறு உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

தேர்த் திருவிழா, ஆண்டுவிழா, குருபூசை, புதுமை, திருமண நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது (ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்) அங்குள்ள பெரியவர்கள் ''உன் பெயரென்ன'' என்பார்கள். நாம் நம் பெயரைச் சொல்வோம். அவ்வாறே ''முருகன்'' என்று முதலில் பாடலில் பெயர் வருகின்றது. பிறகு ''எந்த ஊர்?'' என்பார் கள். அதே போன்று ''செந்தில்'' என்கின்ற ஊர்ப் பெயர். ''அங்கே என்ன செய்கின்ருய்?'' என்பார்கள். இங்கே ''முதல்வன்'' என்ற

ஃ ஒரு விஷயத்தைத் தெரியாதிருப்பது வெட்ககரமான தன்று. அதைத் தெரிந்து கொள்ள மறுப்பது வெட்ககரமானது.

பதில் அக்கேள்விக்கு. ஊருக்கு முதல்வன் என்றால் 'முக்கியமானவன்' என்றுதானே பொருள். அவ்வாறு உள்ளவர்களைப் பார்த்து ''திருமணம் ஆகிவிட்டதா?'' என்று கேட்பர். அதற்குப் பதில் ''மாயோன் மருகன்''. அப்படியானால் ''நீ யார் மகன்?'' என்பார்கள். இங்கே ''ஈசன் மகன்'' என்ற பதில். ''உனக்கு அண்ணன் தம்பிகள் உண்டா?'' என்று வினவுவர். அதற்கு ''ஒருகை முகன் தம்பி'' என்ற விளக்கம். இப்படி கேள்விகளும் கேட்டு சிறப்பினைத் தெரிந்து கொண்டவர், உண்மையான முருக பக்தரே ஆவார். அத்தகு முருகனுடைய தண்டைக் கால்கள் நம்பிக்கைக்கு உரிய தாள்களாகின்றன.

''காலைப் பிடித்தேன் கணபதி'' என்கின்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். ''அவர் காலைப் பிடித்தாவது கெஞ்சிக் கேளப்பா'', ''காலிலே விழுந்து மன்னிப்புக் கேள்'' என்பதெல்லாம் உலக வழக்கு. நம் மனத் துயர்நீங்க - நெஞ்சு உரம் மிக - நம்பிக்கை பெருக - இறைவன் கால்களில் - நம் தலை வைத்து வணங்குதல் எவ்வளவு சிறப்பு? அப்பப்பா! அவ்வாறு வணங்கி வளம் பெறும்போதுதான் அதன் சிறப்புத் தெரியும். எண் சாண் உடம்புக்குத் தலையாவது தலையே; அத் தலை தனைத்தாளில் வைத்து வணங்குதல் - பணிவின், பக்தியின் சிகரம் ஆகும். திருக்குறளில் கடவுள் வாழ்த்தில் வரும் கால்களைப் பாரீர்;

''வாலறிவன் நற்றாள்'', ''மலர்மிசை ஏகினான் மாணடி'',
''வேண்டுதல் வேண்டாமை இலானடி'',
''தனக்குவமை இல்லாதான் தாள்'',
''அறவாழி அந்தணன் தாள்'' ''எண் குணத்தான் தாளை''
''இறைவன் அடி''

என்று வருவது போல் முருகன் கால் 'தண்டைக் கால்' என்று கூறப் படுகிறது. போர்கள் புரிந்து தீமையை அழித்த கால்; நன்மையைக் காத்த கால்; வீரக் கழல் அணிந்த வெற்றி தரும் கால். வீரக் கழல் தான் தண்டை. தண்டை அணிந்த காலை நம்புகின்றோம். சில நேரங் களில் மட்டுமா? இல்லவே இல்லை! எப்பொழுதும் நம்புகின்றோம்! ''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்'' என்பதே போன்று ''நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும் நம்பியே'' என எப்பொழுதும் நம்புகின்றோம். நீங்காத நம்பிக்கை - தொடர்ந்த நம்பிக்கை - அதுதான் 'எப்போதும்' என்பதன் பொருள். ஒருவர் மேல் நம்பிக்கை வைத்துவிட்டால், அதனை எப்பொழுதும் கைக்கொள்ள வேண்டும். ஒரு சில வேளை நம்புதல்; பிற நேரங்களில் நம்புதல் இல்லை என்றால் அதற்குப் பெயர் ''நம்பிக்கை'' இல்லை. ஆகவேதான் ''எப்பொழுதும் நம்பியே'' என்றார். இதனை இன்னும் விளக்குதல் அரிது; ஆனால்

ஃ பயன்படுத்தாது மறைத்து வைந்திருக்கிற செல்வம் ஏதேனும் ஒரு விதத்தில் கைநழுவிப்போம்.

பழக்கத்தில் உணர்தல் - புரிந்து கொள்ளுதல் எளிது. ''தெளிந்தான் கண் ஐயுறவு கொள்ளுதல் தீரா இடும்பை தரும்'' என்கிறது வள்ளுவம். அடியார்கள் வாழ்வில், அறிவியல் அறிஞர்கள் வாழ்வில், மாவீரர்கள் வாழ்வில், இலக்கியப் பேரறிஞர்கள் வாழ்வில், தொழில் வல்லுநர்கள் வாழ்வில், கலைஞர்கள் வாழ்வில், இன்னும் ஏனைய மக்கள் வாழ்வில் எத்தனையோ நம்பிக்கைகள் பொய்த்திருக்கலாம். ஆனால் அவர்கள் நம்பிக்கையைக் கைவிடாமல், சோதனையை வென்று, துன்பத்திற்கே துன்பத்தைக் கொடுத்த வரலாறுகள் உண்டு. ஆம், அவர்கள் கை தொழுவார்கள் - கடவுளை வணங்குவார்கள். நம்பிக்கை அவர்களுக்கு கடவுள் தன்மை அருளி அவர்கள் வாழ்க்கைப் பயனை முழுமையாக்கும். நம்புங்கள், நம்புங்கள், நம் முருகனை நம்புங்கள். நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று கூறிய வெற்றித் தமிழ்ச் சான்றோர், சங்கப்புலவர் நக்கீரர் பாடிய அப்பாடல் நமக்கு வழி காட்டட்டும்.

எங்கள் ஊர்

நகரத்தார்கள் வாழ்ந்துவரும் செட்டிநாட்டு ஊர்களைப் பற்றி 'எங்கள் ஊர்' என்ற தலைப்பில் ''நகரத்தார் குர''லில் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும். எழுத்தார்வமிக்க நகரத்தார்களிடமிருந்து கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. (புகைப்படங்கள் கிடைத்தாலும் அனுப்பி வைக்கலாம்.) அந்தந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அவரவர்களது ஊரைப் பற்றி எழுதியனுப்புவது நலம். கட்டுரை எழுதுவதற்காகச் சில குறிப்புக்களைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

கட்டுரையில் இடம்பெற வேண்டியவை :

சூழலும் இடமும்- காரணப் பெயர்-கோயிற் பிரிவுகளுடன் புள்ளி விவரம் - படித்த ஆண்கள், பெண்களின் சதவிகிதம் - நகரக் கோவிலின் அல்லது கோவில்களின் பெயர்கள் - முக்கிய திருவிழாக்கள் - பொது நிறுவனங்கள் - நகரத்தார் நிறுவிய அறக் கட்டளைகள் - சத்திரங்கள் - மடங்கள் - அரசியல், இலக்கியம் பிற கலைத் துறைகளில் இருப்பவர்கள் - சங்கம், பொதுமடம், நூலகம், வாசகசாலை, வணிகம், தொழில் - திருமணமாகாத பெண்கள் - வேலை வாய்ப்புத் தேடும் பட்டதாரிகளின் சதவிகிதம் - இன்றைய தொழில் வளர்ச்சி மற்றும் ஊரின் குறைபாடுகள்.

எல்லாத் தகவல்களும் கிடைக்கப் பெறுதவர்கள் கிடைத்த மட்டிலும் எழுதி அனுப்பிவைக்கலாம்.



மதுரை, சுந்தரம் திரையரங்குத் திறப்பு விழாவில் உரிமையாளர்களில் ஒருவரான திரு. ஆர்எம். சுந்தரம் முதல் 'டிக்கெட்'டை வெளியிட, அதை திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் பெற்றுக்கொள்ளும் காட்சி.



மதுரை சுந்தரம் திரையரங்கை தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு ப. குழந்தைவேலு தமது பொற்கரங்களால் திறந்து வைக்கிறுர்.



மதுரையில் அண்மையில் நடைபெற்ற தமிழ் அர்ச்சனை மாநாட்டில் தமிழக அமைச்சர்கள் மாண்புமிகு டாக்டர் கே. காளிமுத்து மாண்புமிகு ஆர்எம். வீரப்பன், கலைமகள் திரு. இராம. நடராசன் செட்டியார் ஆகியோர்.



தமிழ் அர்ச்சனை மாநாட்டில் பழனி, தண்டாயுதபாணி திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் இராதா தியாகராசன் அவர்கள் உரையாற்றுகிறார்.



மதுரை காந்தியத் தொண்டர் மன்றத்தின் சார்பில் 16-5-82 அன்று மதுரை ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் வடக் காடி வீதியில் நிகழ்ந்த மாபெரும் தமிழ் அர்ச்சனை மாநாட்டில் மன்றத் தலைவர் பழ. கருப்பையா அவர்கள் நிகழ்த்திய வரவேற் புரையிலிருந்து சில பகுதிகள் :—

ஃ ஓராயிரம் ஆண்டுகளாக ஓய்ந்து கிடந்து ஒடுங்கிப்போன நம்முடைய முதுகுக் கூனை நிமிர்த்து நமக்குப் போர்க் குணத் தைப் புகட்டியவர் காந்தி.

ஃ அநீதியை எங்கு கண்டாலும் அதை எதிர்த்துப் போராட நமக்குக் கற்றுக் கொடுத்தவர் காந்தி.

ஃ 'அரிசன மக்கள் ஆலயத்திற்குள் நுழையக் கூடாது; நுழைந் தால் கடவுள் தீட்டுப்படுவார்' என்று புனிதத்தின் பேராலும் மரபின் பேராலும், ஆகமங்களின் பேராலும் தன்னலச் சக்தி கள் எதிர்த்தபோது வெகுண்டெழுந்தவர் காந்தி. ''இதுதான் இந்து சமயம் என்ருல் நான் இந்துவாகஇருக்கவே வெட்கப் படுகிறேன்'' என்று கொதித்தெழுந்தவர் காந்தி.

ஃ ஐந்து கோடித் தமிழர்களின் தலையிலும் அயல் மொழிகளே எல்லாத் துறைகளிலும் புகுத்தப்பட்டன. இசைத் துறையில் தெலுங்கு; நீதி மன்றத்திலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம்; கோயில்களில் சமக்கிருதம் என்று எங்கெங்கும் அயல் மொழி களே ஆட்சி செய்ய, தமிழ் 'Out House'க்குப் போய் விட்டது.

ஃ உலகில் பெருவாரியான மனிதர்கள் சாப்பிடுவதற்காக மட்டு மே வாயைத் திறந்து கொண்டிருந்த காலத்தில் பேசுவதற் காக வாயைத் திறந்தவன் தமிழன்.

ஃ பாம்பு கடித்துச் செத்துப்போன அப்பூதியின் மகனை அப்பர் பதிகம்பாடி எழுப்பினுரே, தமிழுக்கு மந்திர சக்தி இல்லாவிட் டால் எழுப்பி இருக்க முடியுமா ?

ஃ முதலையுண்ட பாலகனைச் சுந்தரர் தமிழில் பதிகம்பாடி மீட்டா ரே, தமிழுக்கு மந்திர சக்தி இல்லாவிட்டால் மீட்டியிருக்க முடியுமா ?

ஃ தமிழ் மண்ணில், தமிழனின் பணத்தில், தமிழன் வழிபடுவ தற்காகத் தமிழன் கட்டிய கோயிலிலே தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது என்று சொன்னவர்கள்தாம் இவ்வளவு கால மும் தமிழனின் உரிமையைப் பறித்தவர்கள்.

ஃ தொண்டு புரிவது தியானம் பண்ணுவதற்கு நிகரான கடவுள் வழிபாடாம்.

புது மாப்பிள்ளை

வ. தேனப்பன் எம். ஏ.

முத்தையா செட்டியார் முகம், வியப்பால் மலர்ந்தது. ஆனால் இதே போலப் பதினைந்து இருபது இடங்களில் மாப்பிள்ளை பார்த்துப் பொருந்தாமல் போய்விட்டதால், அந்த மகிழ்ச்சி நெடுநேரம் நீடிக்காமல் பொசுக்கென்று போய் விட்டது.

அவர் நடுத்தரமான குடும்பத்தில் பிறந்து, கொஞ்சம் சொத்துப் பத்தோடு வாழ்ந்தவர்தான். ஆனால் அவரது மூத்த மகள் ரத்தினத் திற்குக் கல்யாணம் செய்து வைத்ததிலேயே அவருடைய சொத்தில் முக்கால்வாசி போய்விட்டது.

ரத்தத்தை உறிஞ்சும் அட்டையாகப் பிறக்க வேண்டியவர் இவருக்கு மாப்பிள்ளையாக வாய்த்ததினால், அவர் இப்போது இரண் டாவது மகளுக்குக் கல்யாணம் செய்து வைப்பதற்குத் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

இன்னும் இரண்டு பெண்கள் வேறு, பருவத்துக்கு வந்து நிற்கிறார்கள்.!

சாதாரண மெஸ் நடத்தும் தன்னால், எப்படி இன்னும் மூன்று பெண்களுக்குக் கல்யாணம் செய்து வைக்க முடியும் என்று பெருமூச்சு விட்டார்.

தரகர் தங்கராசு சொன்ன சேதியைக் கேட்ட வியப்போடு, அவரை வீட்டில் இருக்க விடாமல் அழைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டார்.

''முத்தையாண்ணே, இந்த மாப்பிள்ளை ஒரு பாங்க்ல ஆபீசரா இருக்காரு. நல்ல சம்பளம். வாடகை வீட்டுலதான் இருக்காங்க. அவங்க ஆத்தாவும் தங்கச்சியும் மட்டும்தான் கூட இருக்காங்க. குடும் பப் பாங்கான பொண்ணு வேணும்னாங்க. அதுனாலதான் நான் உங்க மக தங்கத்தைப் பாக்கலாம்னு சொன்னேன். நீங்க என்ன சொல் றீங்க?'' என்று கேட்டார் தரகர் தங்கராசு.

"எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற ஆட்சி யிலே, எங்கே தமிழ் எதிலே தமிழ் என்று தேடும் நிலை உள்ளது. இதை மாற்ற வேண்டும்"

— கி. ஆ. பெ. விசுவநாதம்

(தமிழ் அர்ச்சனை மாநாட்டில்)

''நான் என்ன சொல்றது? இந்தக் கலியாணம் நடக்காதுன்னு தான் நினைக்கிறேன்'' என்று ஆர்வமில்லாமல் சொன்னார் செட்டியார்.

''அட, ஏன் இப்படி அமங்கலமாச் சொல்றீங்க? நல்ல இடம். ஆபீசர் வேலே ...''

''தங்கராசு! பியூன் வேலே பாக்குறவனே பத்தாயிரம் சீர்வரிசை கேக்குறான். இந்த ஆளு ஆபீசர்ங்கிறே. அதுனாலே இது ஒத்து வரா தப்பா. எத்தனை மாப்பிள்ளை வந்து எம் பொண்ணைப் பாத்துட்டுப் போயிட்டாங்கன்னு உனக்குத்தான் தெரியுமே! ஏதோ கடத்தல் தங்கத்தை வைச்சிருக்கவனுக் கிட்டேயிருந்து, அதைப் பறிமுதல் பண்ணுறதோட அபராதமும் போடுகிறமாதிரி, எம் மக தங்கத்தையும் கொடுத்து அம்பதாயிரம் பணமும் கொடுக்கிறதுன்னா என்னால முடியாதுப்பா. வேறே இடம் இருந்தாப் பாத்துச் சொல்லு!'' என்று முற்றுப்புள்ளி வைத்தார் செட்டியார்.

தங்கராசு விடுவதாய்த் தெரியவில்லை.

''அண்ணே! நான் பொண்ணைப் பத்திச் சொன்னதும் பணம் எவ்வளவு வாங்கலாம்னு அவங்க பேசலே. அவங்களுக்குத் தேவை யானதெல்லாம் குடும்பப் பாங்கான அழகான பொண்ணுதான். பையன் ஒரு மாதிரி புதுமையான ஆளுங்க. அதிகமா எதுவும் கேக்க மாட்டாங்கன்னு நெனைக்கிறேன். இன்னைக்குச் சாயந்தரம் உங்க வீட்டுக்குப் பொண்ணு பாக்க வரச் சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

''வேண்டாம்ப்பா. பொண்ணு மனசில வீணான ஆசைகளை வளர்த்து விட்டுட்டு அதை நிறைவேத்த முடியாம, அநியாயமாக் கவலைப்பட வைக்கக் கூடாதுன்னுதான் நான் உன்னை வீட்டுல வைச்சுப் பேசாம வெளியே கூட்டியாந்தேன். அதுனாலே எங்க வீட்டுக்கு வரவேண்டாம். ரொம்பக் குறைவா அவங்க பணம் வாங்கிக்கிறதா இருந்தா, பொண்ணுக்கு எந்த விவரமும் சொல்லாம, இன்னைக்கிக் கோயிலுக்குக் கூட்டியாறேம். அங்கே வந்து பாக்கச் சொல்லு .''

''சரி, மாப்பிள்ளை வீட்டு வழியா, பொண்ணைக் கூட்டிக்கிட்டுக் கோயிலுக்குப் போங்க. நான் வேண்டிய ஏற்பாட்டைப் பண்றேன். பொண்ணு பிடிச்சிருந்தா அப்புறம் மத்தததைத் தோதுபோலப் பேசிக்குவோம்'' என்று சொல்லிவிட்டுத் தங்கராசு போய்விட்டார்.

புது இடத்தில் எவ்வளவு கேட்கப் போகிறார்களோ' என்று பயந்த படி மகளையும் மனைவியையும் கூட்டிக்கொண்டு கோயிலுக்குப் புறப் பட்டார் செட்டியார்.

லதாமங்கேஷ்கரின் பாடல்கள் இந்தியாவின் எந்த மூலையிலாவது ஒலித்துக்கொண்டே இருக்கும். அதுபோல கவிஞரின் பாடல்களும் எந்த நேரமும் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன.

— **டாக்டர் கே. காளிமுத்து**

தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர்

(கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில்)

தரகர் தங்கராசுவுக்குப் பக்கத்தில் நின்ற அந்தப் பையன் தங்கத்தைப் பார்த்த பார்வையே, அவனுக்குப் பெண் பிடித்துவிட்டது என்பதைக் காட்டியது.

கோயிலிலிருந்து வரும்பொது ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி விட்டு முத்தையா செட்டியார் மட்டும் தனியாகத் தரகர் தங்கராசுவைச் சந்தித்தார்.

அவர் மாப்பிள்ளைப் பையன் கூப்பிடுவதாகச் சொல்லிக் கூட்டிக் கொண்டு போனபோது அந்த வீட்டை, ஒரு துப்பறியும் நிபுணரைப் போலக் கூர்ந்து பார்த்தார்.

ஒரு சிகரெட் துண்டு கூட இல்லாமல் வீடு சுத்தமாக இருப்பதைப் பார்த்ததும் அவருக்கு ஒரு மகிழ்ச்சி. வீட்டின் வரவேற்பு அறையை அவன் அப்பாவின் படம் மட்டும் அலங்கரித்துக் கொண்டிருந்தது.

ஆத்தாளுடன் வந்த மாப்பிள்ளைப் பையன் தியாகராஜன் ''எங்களுக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்கு. ஆனா சில கண்டிஷனுக்கு நீங்க ஒத்துக்கணும்'' என்றான்.

முத்தையா செட்டியாருக்கு ஷாக் அடித்தது போலிருந்தது.

'சரி, இந்த இடமும் ...' என்று அவர் அவநம்பிக்கையின் எல்லையைத் தொடும் சமயம் —

''பொண்ணுக்கு அன்பளிப்புங்கிற பேர்ல, சீர்வரிசை செய்யுறது எனக்குப் பிடிக்காத ஒண்ணு. கல்யாணச் செலவுக்கு உங்ககிட்டே பணம் வாங்கி, நாலஞ்சு நாள் விருந்துச் சாப்பாட்டுக்கு நாங்க அதை செலவழிக்கிறதும் என் சுயமரியாதைக் கொள்கைக்கு நேர் விரோதம். எனக்குத் தேவை நல்ல அழகான பொண்ணுதானே தவிர பணமில்லே! வீட்டிலேயோ கல்யாண மண்டபத்திலேயோ கல்யாணத்தை நடத்த எனக்கு விருப்பமில்லே. நகரக் கோயில்லதான் திருமணம் நடக்கணும். இந்த முறையிலேதான் நான் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்படுகிறேன். குருவி மாதிரிச் சேத்த பணத்தைக் கல்யாணம்கிற பேர்ல, சூரை விடுகிற கெட்ட பழக்கம் ஒழியணும். எங்க அப்பச்சிக்கு நேர்ந்த கதி, உங்களுக்கு நேரக்கூடாது. இதுதான் என்னோட கண்டிஷன். என்ன சொல்றீங்க?'' என்று நேருக்கு நேராகவே கேட்டார் தியாகராஜன்.

என்ன பதில் சொல்வது? எதிர்காலம் முழுதுமே இருண்ட காலம் தானோ என்று மயங்கிக் கிடந்தவருக்கு முன்னால் கிழக்கு வெளுப்பது போலத் தெரிந்தது.

தனக்கு மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்திற்கே விடிவு காலம் பிறந்துவிட்டது என்று உணர்ச்சி வசப்பட்டு — ''எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்குங்க. எங்க கவலையைப் போக்குகிறதே உங்க கண்டிஷனா இருக்கதுனாலே நான் கண்டிப்பா இதுக்கு ஒத்துக்குறேன். நீங்க எனக்குப் புதுமாப்பிள்ளை மட்டுமில்லே; புது மாதிரியான மாப்பிள்ளையும் கூட!'' என்றார் முத்தையா செட்டியார்.

ஃ தீமை விரைந்து பரவுகிறது. ஆனால் அருளோ அமைதியாக நகருகிறது.

ஃ பேராசை பிடித்த மன்னாதி மன்னர்களெல்லாம் பின்னணியில் தள்ளப்பட்டனர். அதை எண்ணிப் பார்த்து அடங்கியிரு.

ஆசிரியருக்குக் கடிதம்

பேரன்புடையீர்,

வணக்கம். தங்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ''நகரத்தார் குரல்'' படித்து மகிழ்ந்து வருகிறேன். புராதனப் பெருமைகளைப் பேசாமல் நகரத்தார் சமூகத்தில் ஒரு மறு மலர்ச்சியை இவ் விதழ்கள் வழி, தாங்கள் ஏற்படுத்த வேண்டுமென்பது என் ஆசைகளில் ஒன்ருகும்.

நகரத்தார்கள் கல்வித் தகுதி, வேலை நியமனங்கள் பெறுகின்ற பொழுது மட்டுமாவது பிற்பட்ட குலத்தவராகக் கருத வேண்டுமென்ற அரசு ஆணை இவ்வேளையில் வெளிவந்தால், இவ்வாண்டு கல்லூரிகளில் நகரத்தார் மாணவர்கள், மாணவிகள் இடம் பெற, ஒவ்வொரு கல்வி நிலையத்திலும், கங்கைக் கரையில் தோணிக்குக் காத்திருப்பது போல, காத்திருக்க வேண்டியதில்லை. இவ்வாணை வெளிவரும் வரை தாங்கள் அயராது பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,

டாக்டர் ஆறு. அழகப்பன்

இயக்குநர்,

தமிழ்ப் பிரிவு

தமிழ், சமஸ்கிருதம் பிற இந்திய மொழிகளின்

ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

27-4-82

அன்புடையீர்,


இராமநாதபுரம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது காரைக்குடி அல்லது சிவகெங்கைப் பகுதிக்கு 'கண்ணதாசன் மாவட்டம்' என்றோ அல்லது 'செட்டிநாடு மாவட்டம்' என்றோ பெயர் வைக்க, தாங்கள் நமது ''நகரத்தார் குரல்'' மூலம் குரலெழுப்பித் தமிழக அரசுக்கு வலியுறுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

கே. கரசி விஸ்வநாதன், வெற்றியூர்

கவியரசு கண்ணதாசன் ஒரே நாளில் பாடல் எழுதிக் கொடுத்துவிடுவார். அவருக்குப் பிறகு அப்படிப் பாடல் எழுதிக் கொடுப்பவர்கள், இப்போது யாரும் இல்லை. கம்பன் கவிஞரைப் போல் எழுதியிருக்கலாம். ஆனல் கவிஞரைப் போல் பேச முடியாது.

— எஸ். எஸ். தென்னரசு

(கவியரசு கண்ணதாசனின் நினைவு விழாவில்)



உங்கள் குரல்...

'வழி காட்டுவார்களா?' என்ற ஏப்ரல் தலையங்கம் அனைவரும் உணரவேண்டிய, உடன் செயல்படவேண்டிய உயரிய கருத்துக்களை எடுத்தியம்பியுள்ளது. இனியும் பகட்டிற்காக எதையும் செய்யாம லிருந்தால் நம் குலம் முன்னேற்றமடையும்.

இராம. முத்துக்கருப்பன், திருக்கோயிலூர்

வ. தேனப்பன் எழுதிய சிறு கதை நன்றாக இருந்தது. பழ. கருப்பையா அவர்கள் தனது பேட்டியில் மிக அழகாக இன்றைய நிலைமைகளை எடுத்தியம்பியிருக்கிறார். நகரத்தார் குரலின் ஒலி, பேரொலியாய் எல்லாச் செவிப்பறைகளிலும் முட்டி மோதட்டும். நகரத்தாரின் மேன்மைகள் நாளும் பெருகி வர 'நகரத்தார் குரல்' தன் நாக்கினால் சொல்லட்டும்.

முல்லை காந்தி ராமசாமி, தேவகோட்டை

'நகரத்தார் குரல்' ஒரு நல்ல தரமான பதிப்பு. நகரத்தார் குரல் உலகம் முழுவதும் ஒலிக்க வேண்டுமென்பது எனது ஆசை. நல்ல காகிதம், அழகான அச்சு, சங்கச் செய்திகள், மாதந்தோறும் வெளி வருவது உற்சாகத்தை அளிக்கிறது.

K. A. சிதம்பரம், பொள்ளாச்சி-2

நகரத்தார் குரல் எடுப்பான தோற்றத்துடனும் இன நலம் பேணும் ஏற்றமிகு எண்ணங்கள், கொள்கைகளுடனும் அமைந்திருப்பது கண்டு பெரு மகிழ்வெய்துகிறேன்.

கவிஞர் மேலைத் தமிழ்க்குமரன், மேலைச்சிவபுரி

நான் சிறு வயதில் பள்ளத்தூரில் இருந்தேன் செட்டியார்கள் என்றால் சாப்பிடுவார்கள்; திண்ணைகளில் உட்கார்ந்து பேசுவார்கள் என்றுதான் நினைத்திருந்தேன். இப்போது என் எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிட்டேன். கவிஞர்கள் எல்லோருமே நகரத்தாரில்தான் இருப்பார்களோ? உடனுக்குடன் எப்படிக் கவிதை எழுதி விடுகிறார்கள்!

—நடிகை மனோரமா

(கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில்)

'வழிகாட்டுவார்களா?' என்ற ஏப்ரல் மாத தலையங்கத்தின் சில வாசகங்கள் நகரத்தார் குலப் பெண்களை இழிவு படுத்துவதாக இருக்கிறது. நம்மைப் பற்றி நாமே இழிவுபடுத்திக் கொள்ளும் வகையில் தலையங்கங்களை — செய்திகளை வெளியிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய செய்திகளையுடைய இதழ்களைப் பிறரிடம் கொடுத்துப் படிக்கச் சொல்ல இயலாது என்பது தாங்கள் அறியாததல்ல.

தே. முத்துராமன், மதுரை

மே இதழில், காலஞ் சென்ற கவியரசரைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திவிட்டீர்கள். ஜூன் 24 கவியரசரின் பிறந்த தினம். எனவே ஜூன் இதழில் அவரது வாழ்க்கை வரலாறு வெளிவரவேண்டுமென விரும்புகிறேன்.

நேசன், முகவை

ஒவ்வொரு மாத ''நகரத்தார் குர''லும் மிகவும் நல்ல முறையில் பயனுள்ள வகையில் வெளிவந்து கொண்டிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. மே இதழில் கவியரசரின் நினைவுவிழாச் செய்திகள் நெஞ்சை உருக்கும்படி உள்ளன. நேரிலே கலந்து கொண்டு செவிக்குணவு கிடைக்கப் பெறாத என் போன்றோருக்கு அது இன்பத்தைத் தந்தது. நினைவு நாள் விழாக் கவிதைகளை ஒவ்வொன்றுக வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன்.

எல். சுந்தரம் அவர்களின் பேட்டி மிகவும் நன்றாக இருந்தது. நம் இனத்தில் சிறந்து விளங்கும் அன்பர்களையும் பொருளாதாரத்தில் பின்னணியில் இருக்கும் அன்பர்களையும் பேட்டி கண்டு எழுத வேண்டுகிறேன்.

அழ. வெங்கடாசலம், ஹைதராபாத்

ஒரு ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி எப்படியிருக்கும் என்பதற்கு கவியரசு கண்ணதாசன் ஓர் எடுத்துக்காட்டு. திரைப்படப் பாடல்கள் என்றால் தரக்குறைவானவை என்ற நிலைமையை மாற்றியவர் கண்ணதாசன். அவர் நெருப்புப்போல் சுட்டாலும் குளிர் காயவும் பயன்படுவார்.

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்
(கவியரசு கண்ணதாசனின் நினைவு விழாவில்)

சுந்தரம் திரை அரங்குத் திறப்பு விழா

மதுரை கே. கே. நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சுந்தரம் திரை அரங்கின் திறப்பு விழா 14-5-82 அன்று கோலாகல மாக நடைபெற்றது. இவ்விழாவிற்குத் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ராஜாராம் தலைமை ஏற்க, தென்னிந்திய திரைப்பட வணிகக் கழகத் தலைவர் திரு. டி. ராமானுஜம் 'புரொஜெக்டரை' இயக்கி வைத்தார். தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்பு மிகு ப. குழந்தைவேலு திரை அரங்கைத் திறந்து வைத்தார். திரை அரங்கின் உரிமையாளர்களில் ஒருவரான திரு. ஆர் எம். சுந்தரம் முதல் 'டிக்கெட்'டை வெளியிட மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுவின் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அதைப் பெற்றுக்கொண்டார். தமிழ்நாடு திரை அரங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. என். கண்ணாயிரம் வரவேற்றுப் பேசினார். திரைப்பட இயக்குநர் திரு. டி. ராஜேந்தரும் சட்ட மன்ற உறுப்பினர் பழனிச்சாமியும் வாழ்த்திப் பேசினார்கள். திரை அரங்கு உரிமையாளர்களில் மற்றொருவரான திரு. ஆர் எம். கந்தசாமி நன்றி கூறினார்.

இந்தத் திரை அரங்கு 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்டது. 925 இருக்கைகளையுடையது. முழுவதும் குளுகுளு வசதி செய்யப்பட்டது.

பதினாறு வகைச் செல்வங்கள்!

'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என, திருமணங் களில் பல பெரியவர்கள் வாழ்த்துவதை நாம் கண்டிருக்கி றோம். அந்தப் பதினாறு என்ன என்று எல்லோருக்கும் தெரிந் திருக்கும் என்று சொல்லிவிட முடியாது. அவை இவைதான்:

கல்வி	மக்கள்	வன்மை	இன்பம்
தொழில்	சுற்றம்	கொடை	செல்வம்
திருமணம்	அருள்	புகழ்	செல்வாக்கு
வீடு	சுகம்	கலை	ஆரோக்கியம்

தமிழ் அர்ச்சனை மாநாடு

மதுரை, காந்தியத் தொண்டர் மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் பழ. கருப்பையா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட, தமிழ் அர்ச்சனை மாநாடு 16-5-82 அன்று மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் வடக்காடி வீதியில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

இவ்விழாவிற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையேற்றார். தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கே. காளிமுத்து, தமிழக அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர் எம். வீரப்பன், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி., 'முத்தமிழ்க் காவலர்' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. குமரி அனந்தன் எம்.எல்.ஏ., மதுரை திரு. எஸ்.முத்து எம்.எல்.சி., மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், பழனி தண்டாயுதபாணி கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் திருமதி ராதா தியாகராஜன், மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், மன்னார்குடி திரு. செளந்தரராஜ அய்யங்கார் திரு. ராஜரத்தின பட்டர் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றினார்கள். திரு. பழ. கருப்பையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

தமிழ் அர்ச்சனை மாநாட்டில்..

பைபிள் ஹிப்ரு மொழியில் எழுதப்பட்டது; அவரவர் தாய்மொழியில் சொல்லப்பட்டது. இதற்கு ஏசு கோபித்துக் கொள்ளவில்லை. தமிழில் அர்ச்சனை நடைபெற வேண்டும் என்பதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. தமிழ்



அர்ச்சனையை தமிழ்ச் சமுதாயம் ஏற்க வேண்டும்.

சுந்தரமூர்த்தி நாயனர் ஆலயத்தில் அர்ச்சகராக இருந்தவர். அவர் அர்ச்சனை பாட்டேயாகும் என்ருர்.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு சிறப்புண்டு. தமிழைப்பக்தி மொழி என்பார்கள் உள்ளத்தை உருக வைக்கும் பக்திப் பாடல்கள் தமிழில் நிறைய உள்ளன. சமக்கிருதம் உயிரற்ற மொழி என்று சுட்டிக்காட்டக் கூடிய நிலையில் இருக்கிருேம்.

பரம்பொருளுக்கு தமிழை ஒப்பிட்டுக்காட்டினர் சுந்தரம்பிள்ளை. ஆண்டவனை வழிபடும்போது உயிருள்ள மொழியில் வழிபட வேண்டும்.

ஆலயங்களில் அன்னைத் தமிழ் முழுமையாக ஒலிக்க முடியாது உள்ள நிலையை மாற்றிக் காட்ட வேண்டுமென்பது தான் தமிழர்களின் ஆவல். தமிழுக்கு உரிய தகுதியைத் தராமல் இருப்பது தமிழர்களின் தாழ்வைக் காட்டுகிறது.

டாக்டர் கே. காளிமுத்து

தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர்

தமிழ் அர்ச்சனைக்காக மாநாடு நடத்துவது காலத்தின் கட்டாயம். ஆலயத்திற்குள் இந்தப் பிரச்னை ஏன் வந்தது? யாரையாவது குற்றம் சாட்டுவதாக இருந்தால் இந்த இயக்கம் வெற்றி பெற முடியாது.

தமிழில் அர்ச்சனை செய்வது கூடாது என்ற கருத்தை யாரோ ஒரு பிரிவினர் தான் புகுத்தி விட்டார்கள் என்று கருதுவது தவறு. ‘தமிழில் அர்ச்சனை’ என்று சட்டம் கொண்டுவந்தபோது ஒரு நீதிபதி அதை எதிர்த்தார். அவர் பிராமணர் அல்ல. தமிழ் அர்ச்சனையை அர்ச்சகர்கள்தான் எதிர்க்கிருர்கள் என்று நினைத்து அவர்களுடன் மோதக் கூடாது. யார் இதை எதிர்க்கிருர்கள் என்று பார்த்து அவர்களுடன் மோத வேண்டும்.

இன்று இந்திய ஒருமைப் பாடு என்று கூறி இந்தியை எப்படிப் புகுத்துகிருர்களோ அதேபோன்று தான் அன்று சமக்கிருதத்தைப் புகுத்தினர்.

இந்து மதம் அழியாமல் இருக்க வேண்டுமானல் தமிழ் அர்ச்சனை வந்தாக வேண்டும்.

வால்மீகி சமக்கிருதத்தில் எழுதிய ராமாயணத்தைப் படித்து யாரும் ராமனை வணங்கவில்லை.



கம்பன் எழுதிய ராமாயணத்தைப் படித்துத்தான் வணங்குகிருர்கள்.

கடவுளை வணங்கும் ஒவ்வொருவரும் தாய் மொழியில் வணங்க வேண்டும் என்ற உறுதி பெற வேண்டும். அதற்கு எதிர்ப்பானவன் இந்து மதத்திற்கு எதிர்ப்பானவன்.

எனவே தமிழ் மக்களிடம் தமிழ் அர்ச்சனை உணர்வை ஏற்படுத்துங்கள். தமிழ்ச் சமுதாய இயக்கமாக அது மாற வேண்டும்.

அறங்காவலர் குழுதான் கோயிலைப் பொறுத்த வரை சகல அதிகாரம் பெற்றது. உங்கள் குழுவைக் கூட்டி தீர்மானம் போடுங்கள். தமிழில் அர்ச்சனை; விரும்பிக் கேட்டால் சமக்கிருதத்தில் செய்யப்படும் என்று தீர்மானியுங்கள். நடத்துங்கள். யார் தடை செய்கிருர்கள் பார்ப்போம்? அரசாங்கம் உங்களுக்குத் தடையாக வராது! அறநிலையத் துறையும் வராது!

மாண்புமிகு ஆர். எம். வீரப்பன்
(தமிழக செய்தி,
அறநிலையத் துறை அமைச்சர்)

பொன்மொழி

தன்னைவிடப் பெரியவர்களிடத்தில்
பணிவாக நடப்பது **கடமை**
தனக்குச் சமமானவர்களிடத்தில்
பணிவாக இருப்பது **மரியாதை**
தன்னைவிடக் கீழானவர்களிடத்தில்
பணிவோடு இருப்பது **பெருந்தன்மை**

— பெஞ்சமின் பிராங்க்ளின்



பெண்கள் வேலைக்குப் போகலாமா?

டில்லி நகரத்தார் சங்கத்தின் சார்பில் சங்கச் செயற்குழு உறுப்பினர் திரு. பி. எல். ஏகப்பன் அவர்களின் இல்லத்தில் 'பெண்கள் வேலைக்குப் போகலாமா' என்பது பற்றிப் பெண்களிடையே ஒரு கலந்துரையாடலும் அதையடுத்துப் பெண்களின் வாழ்வு நலம் வேண்டி ஒரு திருவிளக்குப் பூஜையும் நடந்தது. கலந்துரையாடலுக்கு திருமதி வசந்தா ராமசாமி தலைமை தாங்கினார்.

ஒருவர் சம்பாதித்துக் குடும்பத்தை நடத்திக்கொண்டு போவது சிரமமாக உள்ள இந்நாட்களில் பெண்களும் வேலைக்குப் போய்க் கணவனுக்கு ஆதரவாக இருக்கலாம் என்றும் சில எதிர்பாராத நிலைமைகளில் பெண்களுக்குச் சம்பாதிக்கும் ஆற்றலும் தைரியமும் இருந்தால் அது அவர்களுக்கு மிகவும் உதவும் என்றும் கூறி திருமதி மீனாள் வினைதீர்த்தான் கலந்துரையாடலைத் தொடங்கி வைத்தார்கள்.

தலைவன் சம்பாதிக்கத் தலைவி வீட்டில் இருந்து வீட்டையும், குழந்தைகளையும், முதியவர்களையும் பேணுவதுதான் நம் பாரம்பரிய முறை என்றும் அதுவே சிறந்தது என்றும் திருமதி சுசீலா ஏகப்பன் கூறினார். பின்னர் இக்கலந்துரையாடலில் திருமதி சரோஜா சிதம்பரம், அழகம்மை முத்துராமன், சித்ரா ஆதப்பன் மற்றும் பலரும் தத்தம் கருத்துக்களை இருதரப்பிலும் எடுத்துப் பேசினார்கள். 'பெண்கள் வேலைக்குப் போவது தேவையில்லை' என்ற முடிவே இறுதியில் வெற்றிபெற்றது.

திருமணம் ஆகாமல் தவிக்கும் பெண்கள் அனைவருக்கும் புதிய ஆண்டில் நல்ல வரனும், வாழ்வு நலனும் வாய்க்கவேண்டுமென்றும் டில்லியில் நகரத்தார் சங்கத்துக்குக் கட்டிடம் கட்டும் முயற்சி வெற்றியாகக் கைகூடி வரவேண்டும் என்றும் பிரார்த்தித்துத் திருவிளக்குப் பூஜை யொன்றையும் பெண்கள் நடத்தினார்கள். 18 சுமங்கிலிப் பெண்கள் தனித்தனியாக அமர்ந்து லலிதா சகஸ்ரநாமங்களைப் பூஜை செய்தது மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

ஃ ஞானவானுக்கு அமைதி தானாக வந்தமைகிறது

ஃ மிகைபடப் பேசுபவர்கள் பெருங்காரியத்துக்கு உதவமாட்டார்கள்

திருமணங்கள்

மகிபாலன்பட்டி சித்தாந்த மணிமொழிச் செல்வர் சி.ராம. இராம சாமிச் செட்டியாரின் பேத்தியும் நாகப்ப செட்டியாரின் மகளுமான செல்வி அன்னத்திற்கும் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபைப் புரவலர் ப. சா. பழனியப்ப செட்டியாரின் மகன் செல்வன் நாகப்பனுக்கும் மகிபாலன்பட்டியில் 3-6-82 அன்று திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

இத்திருமண விழாவில் பூங்குன்றம் திரு. இராமசாமி வரவேற் புரை நிகழ்த்த திரு. செ. சென்னியப்ப முதலியார், டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் சுப. அண்ணாமலை, டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் வெ. சு. அழகப்பன், திரு. க. வெள்ளை வாரணனார், திரு. சொ. சொ. மீ. சுந்தரம், திரு. சோம. லெ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். டாக்டர் தமிழண்ணல் நன்றி நவின்றார்.

ஃ ஃ ஃ

தேவகோட்டை மு. ராம. லெ. ராம. அண்ணாமலை செட்டியாரின் பேத்தியும் மதுரை நகரத்தார் சங்கத்தின் மேலாளர் அண. மெய்யப்ப னின் புதல்வியுமான செல்வி முத்துலட்சுமிக்கும் தேவகோட்டை சி.மு. அரு. ராம. சோம லெட்சுமணன் செட்டியாரின் புதல்வன் செல்வன் இராமநாதனுக்கும் 27-5-82 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மதுரை நகரத்தார் சங்கச் செயலாளர்கள் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், திரு. அரு. முத்தையா, மதுரை தியாகராசர் கல்லூரி முதல்வர் டாக்டர் சுப.அண்ணாமலை, தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி முதல்வர் திரு. ந. சீனிவாசன் மற்றும் நகரத் தார் பெருமக்கள் வந்திருந்து சிறப்பித்தனர்.

ஃ ஃ ஃ

பாகனேரி சுப. வே. மாணிக்கம்செட்டியாரின் புதல்வன் செல்வன் இராமகிருஷ்ணனுக்கும் பட்டமங்கலம் பெரி சுப. ஆறுமுகம் செட்டி யாரின் புதல்வி செல்வி பிரேமாவுக்கும் 6-5-82 அன்று பட்டமங்கலத் தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

மேலைச்சிவபுரி வ, சுப. திருப்பதி செட்டியாரின் தம்பி மகனும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் வ சுப. மாணிக் கம் செட்டியாரின் புதல்வனுமான செல்வன் பாரி என்ற வள்ளியப்ப னுக்கும் காரைக்குடி பெரி. நா. நா. அ. தே. அருணாசலம் செட்டியா ரின் புதல்வி செல்வி வள்ளிக்கண்ணு என்ற வள்ளியம்மைக்கும் 2-6-82 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழா

அரிமளம் செ. அ. செ. செ. செல்லப்ப செட்டியார் அவர்களுக் கும் அவர்களது துணைவியார் முத்தம்மாள் ஆச்சிக்கும் 27-5-82 அன்று பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் ஆலய விடுதியில் சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கல்யாணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்று இரவு மதுரை குஜராத்தி சமாஜத்தில் பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், நகரப் பிரமுகர்கள் பங்குபெற்ற வாழ்த்தரங்கம் நடைபெற்றது.

அப்பர் பெருமானுக்கும் மனை வாழ்வாம்!

பழ. சண்முகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பெருமானின் முதற் பதிகமான ''கூற்ருயினவாறு'' தொடக்கம் முதல் ஈறுவரை முரணுன கருத்துக்கள் இருப்பனபோல் எடுத்த எடுப்பில் தோற்றும். அனைத்தும் பொருள் ஆழமுடையன. ஆழ்கடல் மூழ்கி முத்துக் குளித்து இன்பம் துய்த்தல் சால்பு. பெரு வெள்ளத்தில் வரும் பொருள்கள் அளப்பரியன. பயபக்தியோடு வேண்டுவன, நம் தகுதிக்குத் தக்க கொண்டு மகிழ்ந்தின்புறல் வேண்டும். சலம்பூவோடு தூபம் மறந்தறியேன் என்ற தலைப்புக்கு எவ்வாறு அமைதி காண்பது? சேக்கிழார் பெருமான் தந்தருளிய வரலாற்றில் இப்பதிகம் பாடும் முன்பதாக நாவரசப் பெருந்தகைக்கு சிவதீக்சை எடுத்தருளிவித்ததாகச் செய்தி இல்லை. அப்படியானுல் ''சலம்பூவொடு தூபம்'' உள்ள சடங்கு பற்றி (கிரியா மார்க்கம்) எப்படிச் சொல்லியருள முடியும். இதற்கு அமைதி காணுதல் நம் கடமையன்றே! தொன்று தொட்டுச் செய்து ஏருநிலைமிசை, ஏறிய பெருநிலை, வைப்பு இவையனைத்தும். இப் பிறப்பிலிருந்துதான் சிவசம்பந்தம் தொட்டார்கள் என்பதே இல்லை. முடிந்த நிலை பெற்றவர்கள், நம்மனோர் நலன் கருதி மேலிருந்து கீழே (பூவுலகுக்கு) அனுப்பப்பெறும் அருளாளர்கள் வரிசையிலுள்ள பெருந்தகையார் பெருமான். திலகவதியார் பிறந்தார், மருள்நீக்கியர் அவதரித்தார் என்ற பெரியபுராணச் சொற்களே இந்நிலை உணர்த்தியருளுகின்றன. வங்காளத்தில் (கல்கத்தாவில்) சமணக் கோவில்களில் சலம்பூவோடுதூபம் இன்றும் வழக்கில் உண்டு. ''சிவபக்தி'' என்ற பைந்தமிழ் அமுதச் சொல் சமணத்திலும் ஆளப் பெறுகிறது. நீரும் பூவும் தூபமும் கொண்டு செயற்படுவதின் அடிப்படை வீட்டு நெறியைத்தானே குறித்து நிற்கிறது. சலம் பூ தூபம் செயலளவில் இல்லாவிட்டாலும் அது கொண்டு சேர்க்கும் எல்லையை வைத்து அச்சொற்களையும் மொழிந்தருளும் மரபு என ஏன் நாம் ஏற்கக்கூடாது? இவ்விரிவு இத்துடன் நிற்பதாகுக.

தேவாரத்தில் பெருமானின் வாழ்வுக் காலத்தில் நடப்புச் செய்திகளும் ஆங்காங்கே ஒளிவிட்டு நிற்கின்றன. அவைகளை அவ்வாறே தான் கொள்ளுதல் முறை. அரிச்சுவடி முதல் அரனடியடைந்த சுவடி

உள்ளம் உருகுவதற்குத் தான் வழிபாடு. தாய் மொழி வழிபாட்டுக்கு மனச் சாட்சியுடையவன் ஒப்புக்கொள்வான். உலகத்திற்கென்று ஒரு வழிபாட்டு மொழி தமிழில் இருப்பது போல் வேறு மொழிகளில் இல்லை.

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

(தமிழ் அர்ச்சனை மாநாட்டில்)

வரை பேசப்பெறும் அருள்வாக்குகளில் நம் வகுப்புக்குத் தகுந்தன வற்றை நாம் கெட்டியாகப் பிடித்துப் பயின்றால் - பெருமையுடன் அதுவே அடுத்த வகுப்புக்குச் செலுத்திவிடுமென சான்றோர் சாற்றுவர். எனவே " உயர்ந்தேன் மனைவாழ்க்கையின் ஒன்பொருளும் என்ற சொற்றொடரும்" வலத்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்" என்ற செய்தி பெருமானுக்கு இப்பிறப்பு அநுபவம் (பட்டறிவு) எனக் கருதுதல் சரியேயாகாது.

மேலும் கட்டுரையாசிரியர் கூறுவர்: "மனைவி மக்கள் அம்மக்கட்கு மக்கள் ஆகியோரைக் காக்கும் வாழ்க்கைச் சிக்கலுள் அழுந்திச் சைவத்திறம் பொருந்திலேன். தவநெறி ஒரேன் என்று வருந்தும் பாடற் பகுதியும் கருதத்தக்கது. திருமணத்தாற் கொண்ட மனைவி என்ற பொருளில் 'மணந்த தாரம்' என்று குறிப்பிடுதல் நோக்கத் தக்கது என்று தம் கூற்றுக்குச் சான்றாக ஆதரவு காட்டுகிறார்கள். இவ்வாறு பொருள்தரும் தேவாரத்தை இதன்கீழ் தருகிறோம். கொஞ்சம் சிந்திக்க அடியெடுத்து வைத்து முயன்று பார்ப்போம். இறையருள் துணை நிற்க.

மக்களே மணந்த தாரம் அவ்வயிற்றவரை ஓம்பும்
சிக்குளே அழுந்தி ஈசன் திறம்படேன் தவமதோரேன்
கோப்புளேபோலத் தோன்றி அதனுளே மறையக்கண்டும்
இக்களேபரத்தை ஓம்ப என்செய்வான் தோன்றினேனே!

(பொது 'தம்மானங் காப்பதாகி' எனத் தொடங்கும் பதிகத்தில் இரண்டாவது செய்யுள்)

(கொப்புள்-நீர்க் குமிழ், களேபரம்-உடல்) மணந்த தாரம் என்பதற்குத் திருமணத்தாற்கொண்ட மனைவி என்று ஆசிரியர் பொருள் கொண்டது முழுக்க முழுக்க உடன்பாடே. தாரம் என்று சொல்லியதோடு 'மணந்த' என்று ஏன் சிறப்பித்தருளினர்? முறையாகக் கொண்ட மனைவியைச் சுட்டவே 'மணந்த' என்று பாடியருளினர். 'மணந்த' என்ற சொல்லை, ஆண்டவனை எழுந்தருளிவித்து, தீவளர்த்துப் பல்லோர் ஆசி வழங்க மஞ்சள் தடவிய திருநாண் மங்கலத்தைப் பெண்ணின் கழுத்தில் பூட்டி இன்ப துன்பமிரண்டிலும் கைவிடோம் என உறுதிப்பாடு செய்துகொண்ட அடையாளத்தை மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து கொள்ளும்பொருட்டே தந்தருளினார்.

(தொடரும்)

மதுரை மண், இறைவனுடைய திருமுடிமேல் ஏறிய மண்; மற்ற ஊர் மண் இறைவனுடைய திருவடிகளில் ஏறிய மண்.

மனிதன் கேட்க கடவுள்சொன்ன நூல்- பகவத் கீதை; கடவுள் கேட்க மனிதன் சொன்ன நூல்- திருவாசகம்.

— கி. ஆ. பெ. விசுவநாதம்

(தமிழ் அர்ச்சனை மாநாட்டில்)

கும்பகோணத்தில் நாகப்பா ஆட்டோமோபைல்ஸ் திறப்பு விழா!

கும்பகோணத்தில் நாகப்பா ஆட்டோமோபைல்ஸின் கிளைத் திறப்பு விழா 14-5-82 அன்று சிறப்பாக நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர், மொய்தீன் புகையிலைக் கம்பெனி அதிபர் திரு. அல்ஹாஜ் இ. எஸ். எம். பக்கிர் முகமது நிறுவனத்தைத் திறந்து வைத்தார். 'ஹீரோ மெஜஸ்டிக் மொபெட்'டின் முதல் விற்பனையை முன்னுள் சட்ட மன்ற உறுப்பினர், A.R.R சீவல் கம்பெனி அதிபர் திரு. ஏ.ஆர். இராமசாமி தொடங்கி வைத்தார்.

இந் நிறுவன உரிமையாளர்களான திரு. எஸ். முத்துக்கருப்ப செட்டியாரும், திரு. ஆர் எம். முத்தழகப்ப செட்டியாரும் விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றனர்.

நம்மில் மற்றுமோர் டாக்டர்

காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. வெ. சு. அழகப்பனுக்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அண்மையில் 'டாக்டர்' பட்டம் வழங்கியிருக்கிறது. 'பதினோராந் திருமுறைத் திறன்' என்பது பற்றிய அவரது ஆராய்ச்சிக்காக இப்பட்டம் வழங்கப் பட்டிருக்கிறது. ஏற்கனவே புறநானூற்றில் ஆராய்ச்சி செய்து 'எம். லிட்' பட்டமும் இவர் பெற்றிருக்கிறுர். இவர் நல்ல கவிஞர்; சொற்பொழிவாளர்; எழுத்தாளர்; ஆய்வாளர்; நூலாசிரியர். 'சிலம்பின் முதல் ஒலி', 'சமயக்கட்டுரை மாலை' ஆகிய நூல்களை அவர் எழுதியுள்ளார். அவருக்கு நம் வாழ்த்துக்கள்.

கன்னியாகுமரியில் நகர விடுதி தேவை

இந்தியாவின் தென்கோடியும் முக்கடல் சங்கமமாகின்றதும் சரித்திரப் புகழ்மிக்கதுமான கன்னியாகுமரிக்கு நம் இனத்தவர்கள் வந்து கடலில் நீராடி, தேவியைத் தெரிசித்து, சூரிய பகவானின் உதயத்தையும் அஸ்தமனத்தையும், விவேகானந்தரின் நினைவுச் சின்னத்தையும், காந்தி மண்டபத்தையும் மன நிம்மதியோடு கண்டுகளித்துச் செல்ல குறைந்த செலவில் தங்குவதற்கு விடுதிகள் இல்லை. நமக்கென்று அங்கு ஒரு 'நகரத்தார் விடுதி' இல்லாதது பெரும் குறையாகும்.

கன்னியாகுமரியை அடுத்துள்ள நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரிக்குச் சென்று திரும்பினுல் கூட ஒரு நபருக்கு பத்து ரூபாய் செலவாகும். அதுவும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்து நம் இனத்தார் வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கினுல் என்ன செலவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை. இக் குறையைத் தீர்ப்பதற்கு நம்மவரில் பொருளாதார வசதி படைத்தவர்களும் பெரியவர்களும் முன்வரவேண்டும். சுற்றுலா வரும் நடுத்தர வர்க்கத்தினருக்கு அது பேருதவியாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

லெ. வெள்ளையப்பன், குலசேகரம்.

மதுரை-625009, கிருஷ்ணுபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர்நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.

Regd. No. TN / MA (C) 106 Nagarathar Kural

முதலாமாண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 16-2-1930 மறைவு: 27-6-1981

லெட்சுமி M. சிங்காரம் செட்டியார்

அச்சடிக்கும் தாகிதத்தின் அரசர் ஆனார்
அறப்பணிகள் தொடங்குங்கால் அமரர் ஆனார்
நிச்சயமாய் லெட்சுமிசிங் காரம் செய்த
நிகரில்லாத் தனிச்சேவை நெஞ்சில் நிற்கும்

லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்,

38, கீழ ஆவணி மூல வீதி,
மதுரை-625 001.

தந்தி : ' *Paper Queen* ' தொலைபேசி: 22273
& 30052
25704 (இல்லம்)